


**29. 12. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. நகர்புற வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. தமிழக மீனவர்கள் பிரச்சனையில் இலங்கை அரசின் செயல்பாடுகளை கவனத்தில் கொண்டுள்ளதாக மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு. S. P. சிங் பாஹேல் கூறியுள்ளார்..

3. தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் கொள்முதல் முன்னேற்பாடுகள் குறித்த முத்தரப்பு ஆலோசனை கூட்டத்தில் மாநில அமைச்சர்கள் இன்று பங்கேற்றுள்ளனர்.

4. சென்னையில் நடைபெற உள்ள சர்வதேச பாய்மர படகு சேம்பியன் பட்ட போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

5. ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி திருக்கோவில் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் திறப்பிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

இனி விரிவான செய்திகள்

*************

குடியரசு துணை தலைவர்

நகர்புற வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி குமரகுரு பள்ளத்தில் பொலிவுறு நகர இயக்கத்தின் கீழ் கட்டப்பட்ட குடியிருப்புகளை திறந்துவைத்து உரையாற்றிய அவர், தமிழ்மொழி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் மீதான பிரதமரின் ஆழமான பிணைப்பை எடுத்துரைத்தார்.

பொலிவுரு நகர இயக்கத்தின் கீழ், ஏராளமான திட்டங்கள் இப்பகுதிகளில் செயல்படுத்தப்படுவதாக அவர் கூறினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக குமரகுரு பள்ளத்தில் குடியிருப்பு பயனாளிகளுக்கு வீட்டு சாவிகளை வழங்கியதோடு அவர்களுடன் கலந்துரையாடினார்.

புதுச்சேரி பல்கலைகழகத்தின் 30ஆவது பட்டமளிப்பு விழாவிலும் குடியரசு துணை தலைவர் பங்கேற்கிறார்.

*************

S. P. சிங் பாஹேல்

தமிழக மீனவர்கள் தொடர்பான பிரச்சனையில் இலங்கை அரசின் செயல்பாடுகளை மத்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளதாக மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு. S. P. சிங் பாஹேல் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருநாட்டு மீன்வளத்துறை அமைச்சர்களும், இதுதொடர்பான ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாகவும், மீனவர்களின் நலன் பாதுகாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மத்திய அரசு ஊரக பகுதி மேம்பாடு, விவசாயிகள் மற்றும் தொழிலாளர் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ராமேஸ்வரத்தில் நடைபெற உள்ள காசி தமிழ் சங்கம் நிறைவு விழாவில் பங்கேற்க தாம் தமிழகம் வந்திருப்பதாகவும் கூறினார்.

முன்னதாக மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அவர் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

*************

பாரத ஸ்டேட் வங்கி

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்திற்கான மாநிலங்களின் நிகர லாபம் 17 ஆயிரம் கோடி ரூபாய்க்கு

மேலாக இருக்கும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

இதனால் மாநிலங்களுக்கான சராசரி நிதி ஒதுக்கீடு மேம்படும் என்றும் இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தற்போது பெயர் மாற்றத்துடன் மறு வடிவமைப்பு பெற்றுள்ள நிலையில் கூடுதல் வருவாய் 125 வேலை நாட்கள் போன்றவை பெரிதும் பயனளிக்கும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

*************

பிரதமர் – பாதுகாப்பு தளவாடம்

……….. MUSIC……

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக மேம்பட்ட நிலையில் பாதுகாப்பு துறையின் வளர்ச்சி குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

……….. MUSIC……

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில், உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்பு தன்மையுடன் நாட்டின் இறையான்மை உறுதியுடன் நிலைநாட்டப்பட்டது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதலில், நம் நாட்டு

பாதுகாப்பு படைகள் பாகிஸ்தான் பகுதிக்குள் நுழைந்து நூற்றுக்கணக்கான தீவிரவாதிகளை அழித்ததுடன், தீவிரவாத முகாம்களையும் தகர்த்தது.

பிரம்மோஸ் ஏவுகணை, ரஃபேல் போர் விமானங்கள், அதி நவீன ட்ரோன் மூலம் இந்தியாவின் உயர் தொழில்நுட்ப வலிமையை பறைசாற்றும் வகையில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலை உலகம் வியப்புடன் கண்ணோக்கியதாக பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் வாய்ஸ்

சுய சார்பு பாரதத்தை பிரதிபலிக்கும் வகையில், ஒரு லட்சத்து 54 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு தளவாடங்கள், நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டது,

பாதுகாப்பு துறைக்கான ஒதுக்கீடு 6 லட்சத்து 81 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டது,

தமிழகம் மற்றும் உத்திரபிரதேசத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு தொழில் பேட்டைகள் 9 ஆயிரத்து 100 கோடி ரூபாய் பெருமான முதலீடுகளை ஈர்த்து சாதனை படைத்துள்ளன.

இந்நிலையில் நம் நாட்டின் பாதுகாப்பு துறையில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் குறித்து திருச்சி டிடிட்சியாவின் துணை தலைவர் திரு.ராஜாராம் எடுத்துரைக்கையில்

வாய்ஸ்

2025ஆம் ஆண்டு முடிவடைய ஓரிரு நாட்களே உள்ள நிலையில், நவீன தொழில்நுட்ப திறனுடன், தேசத்தின் பாதுகாப்பு மற்றும் தற்சார்பு பாரதத்திற்கான வலிமையான பாதையை அரசு உறுதி செய்துள்ளது.

……..Music……..

*************

அமைச்சர்கள்

தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல் கொள்முதல் முன்னேற்பாடுகள் குறித்த முத்தரப்பு ஆலோசனை கூட்டத்தில் மாநில அமைச்சர்கள் இன்று பங்கேற்றுள்ளனர்.

தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் இந்த கூட்டத்தில் மாநில அமைச்சர்கள்

திரு. கே. என். நேரு, திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், திரு.டி.ஆர்.பி.ராஜா, திரு.அன்பில் மகேஷ்பொய்யாமொழி உள்ளிட்ட 9 அமைச்சர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்ட ஆட்சியர்கள் விவசாயிகள் கலந்துகொண்டுள்ள இக்கூட்டத்தில் கொள்முதலுக்கான அனைத்து நிலைபாடுகள் குறித்தும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*************

வழிகாட்டு நெறிமுறைகள்

தமிழ்நாட்டில் 2026 புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை காவல்துறை வெளியிட்டுள்ளது.

இதன்படி வரும் 31ஆம் தேதி மாலைமுதல் நட்சத்திர விடுதிகள், உணவகங்கள், கேளிக்கை விடுதிகளுக்கு வரும் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கான மேடைகளுக்கு தீயணைப்பு துறையின் அனுமதி கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு,

நீச்சல் குளத்தின் அருகே மேடை அமைக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

காவல்துறையின் உத்தரவுகளையும், நேர வரம்புகளையும் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

*************

உதயநிதி

சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்பட உள்ள சர்வதேச இளையோர் பாய்மர படகு சேம்பியன் பட்ட மற்றும் ட்ரையத்லான் போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் இன்றுஆய்வு மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வு கூட்டத்தில் தலைமை செயலாளர் திரு.முருகானந்தம் உள்ளிட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதனிடையே திருப்பூர் மாவட்டத்தில் திமுக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டில் பங்கேற்பதற்காக கட்சி தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் இன்று கோவை மாவட்டம் சென்றடைந்தார்.

*************

தமிழிசை சௌந்தர்ராஜன்

திமுக அரசு, மகளிர் பாதுகாப்பு, சமூகநீதி பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தோல்வியடைந்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனால் மாநிலத்தில் மாற்றம் தேவை என்று குறிப்பிட்டார்.

காசி தமிழ்சங்கமம் போன்ற நிகழ்வுகளை சுட்டிக்காட்டிய அவர், தமிழ்மொழி மற்றும் அதுசார்ந்த பண்பாட்டை கொண்டாடுவதில் பிரதமர் திரு.நரேந்திரமோடி முனைப்புடன் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

*************

செங்கோட்டையன்

தமிழக வெற்றிகழகத்தில் வரும் பொங்கலுக்குள் முக்கிய அரசியல் தலைவர்கள் இணைய வாய்ப்பிருப்பதாக இதன் நிர்வாக குழு ஒருங்கிணைப்பாளர் திரு.செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிதாக தொடங்கப்பட்டுள்ள கட்சி என்பதால் மக்கள் கோரிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான அரசியல் மாற்றம் உருவாகி வருவதாகவும் அவர் கூறினார்.

*************

எஸ்.ஜெய்சங்கர்

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில் சொர்க்கவாசல் திறப்பு நாளை நடைபெறுவதை ஒட்டி அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

பகல் பத்து திருமொழி 10ஆம் திருநாளான இன்று நம்பெருமாள், மோகினி அலங்காரத்தில் திருவாபரணங்களுடன் அர்ஜூன மண்டபத்தில் எழுந்தருளி சேவை சாதிக்கிறார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் ஸ்ரீரங்கம், மற்றும் திருவாணைக்காவல் ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

*************

பறவைகள் சரணாலயம்

தமிழ்நாட்டில் பறவைகள் மற்றும் விலங்குகள் கணக்கெடுப்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்ட வருகின்றன.

பல்வேறு பகுதிகளில் நீர்நிலை வாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணிகள் முடிவடைந்த நிலையில்,

நாகை மாவட்டம் கோடியக்கரை பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டு பறவை கணக்கெடுப்பு பணிகள் தொடங்கியுள்ளன.

பூநாரை, செங்கல்நாரை, வரித்தலைவாத்து, ஊசிவால் சிரவி உள்ளான் உள்ளிட்ட 294 வகையான பறவைகள் சரணாலயத்தில் குவிந்துள்ளன.

பள்ளி கல்லூரி மாணாக்கரும், பறவை ஆராய்ச்சி மாணாக்கரும் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வனக்கோட்டத்தில் நடைபெற்ற பறவைகள் கணக்கெடுப்பில் அறிய வகை வெளிநாட்டு பறவைகள் கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் 10 வன சரகங்களில் இன்றுமுதல் 5 நாட்கள் புலிகள் கணக்கெடுப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*************

## முல்லை பெரியாறு

முல்லை பெரியாறு அணை பகுதியில், மத்திய மண்ணியல் துறை விஞ்ஞானிகள் குழுவினர் மேற்கொண்ட ஆய்வு நிறைவடைந்ததை அடுத்து, ஆய்வறிக்கை, தேசிய அணை பாதுகாப்பு ஆணையதலைவர் திரு.அனில் ஜெய்னிற்கு அனுப்பிவைக்கப்படும் என்று நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, அணையின் உறுதிதன்மையை ஆராய்வதற்காக மேற்கொண்ட ஒருவார கால ஆய்வு பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன.

*************

## பறவை காய்ச்சல்

கேரளாவில் பறவை காய்ச்சல் நோய் எதிரொலியாக தென்காசி மாவட்டத்தின் எல்லை பகுதியான புளியறை சோதனை சாவடியில் கண்காணிப்பு பணிகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளன.

கால்நடை அதிகாரிகள் புளியறை பகுதியில் முகாமிட்டு, கேரளத்திலிருந்து வரும் வாகனங்களின் மீது நோய் தடுப்பு மருந்துகளை தெளித்து வருகின்றனர்.

அம்மாநிலத்திலிருந்து கோழி இறைச்சி கழிவுகள் கொண்டுவரப்படுவதை தடுக்கும் பணியிலும் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

*************

## இருவரி

தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கிளையை ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று திறந்துவைத்தார். விவசாயிகளுக்கு இந்த கிளை பெரிதும் பயன்பெறும் என்றார்.

காஞ்சிபுரம் மாவட்ட பள்ளிகல்வித்துறை சார்பில் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு கல்வி உதவிதொகையை ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் 13 ஒன்றிங்களிலும் அடுத்த 21 நாட்கள் சிறப்பு முகாம்கள் மூலம் கால்நடைகளுக்கு தடுப்பூசி பணிகள் நடைபெற உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் வேம்பத்தூர் பகுதியில் கோமாரி நோய் தடுப்பூசி பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா இன்று துவக்கிவைத்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் நீர்நிலைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பும் தன்னார்வலர்கள் இணையதளத்தில் தங்களது பெயரை பதிவு செய்யலாம் என ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

மாவட்டம் முழுவதும் நீர்நிலைகளை மேம்படுத்தி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*************

கிரிக்கெட்

அஹமதாபாத்தில் தமிழ்நாடு அணிக்கு எதிரான விஜய் ஹசாரே கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 289 ரன் வெற்றி இலக்குடன் விளையாடும் கர்நாடகா சற்றுமுன் 6 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 38 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக முதலில் பேட் செய்த தமிழ்நாடு 49.5 ஓவரில் 288 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது